உ

## பாலு சரவண சர்மா

பழைய தாம்பரம் பரம்பரை புரோகிதர், ஜோதிடர், பஞ்சாங்க கணிதர்
9, 4வது தெரு, கல்யாண நகர், தாம்பரம், சென்னை 45
தொலைபேசி எண்கள்: 91 98403 69677, 91 44 2226 1742
மின் னஞ்சல்: **prohithar@gmail.com** இணையம்: **www.prohithar.com**

# வாஸ்து நாள் 2010 – 2015

(சென்னை, காஞ்சி, திருவள்ளூர் மாவட்டங்களுக்கு பொருந்தும்)

விரிவான குறிப்புகள் இறுதியில் தரப்பட்டுள்ளது

**© காப்புரிமை2010. இதில் இடம் பெற்ற தகவல்கள் எனது சொந்த ஆக்கம். இதை புத்தகமாக வெளியிட உள்ளதால் இந்த தகவல்களை வணிக நோக்கில், மற்ற இணைய தளங்களில்(Website), இணைய கூடல் (Blog)களில் பயன் படுத்த அனுமதி தரப்படவில்லை.**

தமிழ் தேதி: சித்திரை 10

வாஸ்து நேரம்: காலை 7:53 முதல் காலை 9:23 வரை
முக்கியமான நேரம்: காலை 8:47 முதல் காலை 9:23 வரை
சென்னை சூரிய உதயம்:5.52 அஸ்தமனம்:18.23

| தேதி | கிழமை | ராகுகாலம் | எமகண்டம் | ஆகாத நட்சத்திரம் |
|---|---|---|---|---|
| 23.4.2010 | வெள்ளி | 10.33-12.07 | 15.15-16.49 | பூராடம், உத்திராடம் |
| **23**.4.2011 | சனி | 8.59-10.33 | 13.40-15.14 | கார்திகை,ரோகினி |
| **22**.4.2012 | ஞாயிறு | 16.48-18.22 | 12.07-13.40 | அஸ்தம் |
| **23**.4.2013 | செவ்வாய் | 15.15-16.49 | 8.59-10.33 | அவிட்டம் |
| **23**.4.2014 | புதன் | 12.07-13.41 | 7.25-8.59 | திருவாதிரை |
| **23**.4.2015 | வியாழன் | 13.40-15.14 | 5.52-7.25 | விசாகம் |

தமிழ் தேதி: வைகாசி 21

வாஸ்து நேரம்: காலை **9:06** முதல் காலை **10:36** வரை
முக்கியமான நேரம்: காலை **10:00** முதல் காலை **10:36** வரை
சென்னை சூரிய உதயம்: 5:52 அஸ்தமனம்: 18.33

| தேதி | கிழமை | ராகுகாலம் | எமகண்டம் | ஆகாத நட்சத்திரம் |
|---|---|---|---|---|
| 4.6.2010 | வெள்ளி | 10.31-12.07 | 15.05-16.56 | பூசம் |
| 4.6.2011 | சனி | 8.54-10.31 | 13.43-15.20 | அனுஷம் |
| 3.6.2012 | ஞாயிறு | 16.56-18.33 | 12.07-13.43 | ரேவதி, அஸ்வினி |
| 4.6.2013 | செவ்வாய் | 15.20-1656 | 8.54-10.31 | பூரம், உத்திரம் |
| 4.6.2014 | புதன் | 12.07-13.43 | 7.18-8.54 | உத்திராடம் |
| 4.6.2015 | வியாழன் | 13.43-15.20 | 5.42-7.18 | கார்திகை |

© www.prohithar.com

© காப்புரிமை2010. இதில் இடம் பெற்ற தகவல்கள் எனது சொந்த ஆக்கம். இதை புத்தகமாக வெளியிட உள்ளதால் இந்த தகவல்களை வணிக நோக்கில், மற்ற இணைய தளங்களில்(Website), இணைய கூடல் (Blog)களில் பயன் படுத்த அனுமதி தரப்படவில்லை.

## தமிழ் தேதி: ஆடி 11

வாஸ்து நேரம்: காலை **6: 41** முதல் காலை **8:11** வரை
முக்கியமான நேரம்: காலை **7:35** முதல் காலை **8:11** வரை
சென் னை சூரிய உதயம்: 5:53 அஸ்தமனம்:18.38

| தேதி | கிழமை | ராகுகாலம் | எமகண்டம் | ஆகாத நட்சத்திரம் |
|---|---|---|---|---|
| 27.7.2010 | செவ்வாய் | 15.23-17.02 | 9.04-10.39 | திருவாதிரை, புணர்பூசம் |
| 26.7.2011 | புதன் | 12.15-13.51 | 7.28-9.04 | விசாகம் |
| 26.7.2012 | வியாழன் | 13.51-15.26 | 5.53-7.28 | உத்திரட்டாதி |
| 27.7.2013 | சனி | 9.04-10.39 | 13.51-15.26 | மகம் |
| 27.7.2014 | ஞாயிறு | 17.02-18.38 | 12.15-13.51 | மூலம் |
| 27.7.2015 | திஙகள் | 7.28-9.04 | 10.39-12.15 | அஸ்வினி,பரணி |

## தமிழ் தேதி: ஆவணி 6

வாஸ்து நேரம்: பகல் **2:21** முதல் பகல் **3:51** வரை
முக்கியமான நேரம்: மதியம் **3:15** முதல் மாலை **3:51** வரை
சென் னை சூரிய உதயம்: 5:57 அஸ்தமனம்:18.26

| தேதி | கிழமை | ராகுகாலம் | எமகண்டம் | ஆகாத நட்சத்திரம் |
|---|---|---|---|---|
| 22.8.2010 | ஞாயிறு | 16.53-18.27 | 12.12-13.46 | மிருகசீருடம் |
| 23.8.2011 | செவ்வாய் | 15.19-16.52 | 9.05-10.38 | சுவாதி, விசாகம் |
| 22.8.2012 | புதன் | 12.12-13.46 | 7.31-9.05 | பூரட்டாதி, உத்திரட்டாதி |
| 22.8.2013 | வியாழன் | 13.46-15.19 | 5.58-7.31 | பூசம், ஆயில்யம் |
| 22.8.2014 | வெள்ளி | 10.38-12.12 | 15.19-4.53 | கேட்டை, மூலம் |
| 23.8.2015 | ஞாயிறு | 16.52-18.26 | 12.12-13.45 | அஸ்வினி |

## தமிழ் தேதி: ஐப்பசி 11

வாஸ்து நேரம்: காலை **6: 50** முதல் காலை **8:20** வரை
முக்கியமான நேரம்: காலை **7:44** முதல் காலை **8:20** வரை
சென் னை சூரிய உதயம்: 6.02 அஸ்தமனம்:17.44

| தேதி | கிழமை | ராகுகாலம் | எமகண்டம் | ஆகாத நட்சத்திரம் |
|---|---|---|---|---|
| 28.10.2010 | வியாழன் | 13.20-14.48 | 6.01-7.28 | அனுஷம் |
| 28.10.2011 | வெள்ளி | 10.24-11.52 | 14.48-16.16 | ரேவதி |
| 27.10.2012 | சனி | 8.56-10.24 | 13.20-14.48 | மகம் |
| 28.10.2013 | திங்கள் | 7.29-8.57 | 10.25-11.53 | பூராடம் |
| 28.10.2014 | செவ்வாய் | 14.48-16.16 | 8.56-10.24 | கார்திகை |
| 28.10.2015 | புதன் | 11.52-13.20 | 7.28-8.56 | அஸ்தம் |

© www.Prohithar.com

தமிழ் தேதி: கார்திகை 8

வாஸ்து நேரம்: காலை **10:12** மணி முதல் காலை **11:42** மணி வரை

முக்கியமான நேரம்: காலை **11:08** முதல் காலை **11:42** வரை

சென் னை சூரிய உதயம்: 6.12 அஸ்தமனம்:17.39

| தேதி | கிழமை | ராகுகாலம் | எமகண்டம் | ஆகாத நட்சத்திரம் |
|---|---|---|---|---|
| 24.11.2010 | புதன் | 11.55-13.21 | 7.37-9.03 | விசாகம், அனுஷம் |
| 24.11.2011 | வியாழன் | 13.22-14.48 | 6.12-7.38 | ரேவதி |
| 23.11.2012 | வெள்ளி | 10.29-11.55 | 2.47-4.13 | மகம் |
| 24.11.2013 | ஞாயிறு | 16.13-17.39 | 11.55-13.21 | பூராடம் |
| 24.11.2014 | திங்கள் | 7.37-9.03 | 10.29-11.55 | பரணி, கார்திகை |
| 24.11.2015 | செவ்வாய் | 14.47-16.13 | 9.03-10.29 | உத்திரம், அஸ்தம் |

தமிழ் தேதி: தை 12

வாஸ்து நேரம்: காலை **9:48** முதல் காலை **11:18** வரை

முக்கியமான நேரம்: காலை**10:42** முதல் காலை **11:18** வரை

சென் னை சூரிய உதயம்: 6.36 அஸ்தமனம்:18.07

| தேதி | கிழமை | ராகுகாலம் | எமகண்டம் | ஆகாத நட்சத்திரம் |
|---|---|---|---|---|
| 26.01.2011 | புதன் | 12.21-13.47 | 8.02-9.28 | பூரட்டாதி,உத்திரட்டாதி |
| 26.01.2012 | வியாழன் | 13.47-3.14 | 6.36-8.02 | பூசம் |
| 25.01.2013 | வெள்ளி | 10.55-12.21 | 15.14-16.40 | அனுஷம்,கேட்டை |
| 25.01.2014 | சனி | 9.28-10.54 | 13.47-15.13 | ரேவதி |
| 26.01.2015 | திங்கள் | 8.02-9.28 | 10.55-12.21 | பூரம், உத்திரம் |

தமிழ் தேதி: மாசி 22

வாஸ்து நேரம்: காலை **9:35** காலை **11:05** முதல் வரை

முக்கியமான நேரம்: காலை**10:29** முதல் காலை **11:05** வரை

சென் னை சூரிய உதயம்: 6.22 அஸ்தமனம்: 18.18

| தேதி | கிழமை | ராகுகாலம் | எமகண்டம் | ஆகாத நட்சத்திரம் |
|---|---|---|---|---|
| 06.03.2011 | ஞாயிறு | 16.49-18.18 | 12.21-13.50 | மகம் |
| 5.03.2012 | திங்கள் | 7.52-9.22 | 10.51-12.21 | சதையம் |
| 6.03.2013 | புதன் | 12.20-13.50 | 7.51-9.21 | கார்திகை |
| 6.03.2014 | வியாழன் | 13.50-15.19 | 6.22-7.51 | அஸ்தம், சித்திரை |
| 6.03.2015 | வெள்ளி | 10.51-12.21 | 15.20-16.49 | திருவோணம், அவிட்டம் |

தமிழ் தேதி: பங்குனி 22

வாஸ்து நேரம்: 10:08 காலை முதல் காலை 10:44 வரை

முக்கியமான நேரம்: 10:08 காலை முதல் காலை 10:44 வரை

சென் னை சூரிய உதயம்: 6:03 அஸ்தமனம்: 6:21

| தேதி | கிழமை | ராகுகாலம் | எமகண்டம் | ஆகாத நட்சத்திரம் |
|---|---|---|---|---|
| 4.4.2012 | புதன் | 12:13-13:45 | 7:35-9:07 | திருவோணம் |
| 4.4.2013 | வியாழன் | 13:45-15:17 | 6:037:35 | மிருகசீருஷம் |
| 5.4.2014 | சனி | 9:07-10:40 | 13:45-15:17 | விசாகம் |
| 5.4.2015 | ஞாயிறு | 16:50-18:21 | 12:13-13:15 | பூரட்டாதி |
| 4.4.2016 | திங்கள் | 7:35-9:07 | 10:40-12:13 | பு.பூசம், பூசம் |

© www.prohithar.com

# பூமி பூஜை இட அளவு மற்றும் திசைகள்

பூமி பூஜை குழி அளவு பரிமாணம்









**வாஸ்து நாள் தங்களுக்கு பொருத்தமானதா?**

- வாஸ்து நாள் அன்று கணவன் , மனைவி இருவருக்கும் சந்திராஷ்டம தோஷம் கண்டிப்பாக இருக்கக்கூடாது

**மனைவி கர்பமாக இருக்கும் பொழுது...**

- கட்டிடம் கட்ட துவங்குவதும், கிரஹப்பிரவேசம் செய்வதும் கூடாது (பூமுடிப்புக்கு முன்னர் நன்று- சிலர்)

**இராசிக்கு தலைவாசல்:**

- ரிஷபம், மிதுனம், கடகம்: வடக்கு வாசல், மேற்கு வாசல்(காலப்பிரகாசிகை நூல்படி)
- சிம்ம, கன்னி, துலாம்: கிழக்கு, தெற்கு வாசல், மேற்கு வாசல்(காலப்பிரகாசிகை நூல்படி
- விருச்சிகம், தனுசு, மகரம்: தெற்கு வாசல்
- கும்பம், மீனம், மேஷம், தெற்கு வாசல், கிழக்கு வாசல்(காலப்பிரகாசிகை நூல்படி)

**குடிபுக உகந்த மாதங்கள்:**

- சித்திரை, வைகாசி, ஆவணி, ஐப்பசி, கார்திகை, மாசி
- தெலுங்கு பேசுபவர்கள் ஆடி, புரட்டாசி, பங்குனி அமாவாசைக்கு பின்னர் செய்யலாம்

**குடி புக உகந்த கிழமைகள்:**

- திங்கள், புதன் , வியாழன் , வெள்ளி

**தேய்பிறையும் குடிபுகுதலும்:**

- வளர்பிறையில் பிரவேசம் செய்யலாம்
- தேய்பிறையில் தசமி வரை குடிபுகுதல் நன்று (காலப்பிரகாசிகை நூல்)

**நல்ல நாள்:**

- இல்லத்தரசியின் நட்சத்திரத்திற்கு உகந்த நாளில் கிரஹப்பிரவேசம் செய்ய வேண்டும்

**கிரஹப்பிரவேசம் செய்ய உகந்த காலம்**

- முற்பகலும், நன்பகலும் மிகவும் நல்லது என்கிறது காலப்பிரகாசிகை எனும் பழமையான கிரந்தம்
- அதிகாலை பிரம்ம முகூர்த்தம் என்றாலும் அஷ்டம சுத்தி மிகவும் முக்கியமானது
- அனைத்து நாட்களிலும் அதிகாலையில் கிரஹப்பிரவேசம் செய்ய உகந்த காலம் அமையாது.

**குடிபுக உகந்த வீடுகள்:**

- கட்டுமான வேலை, சுன்னாம்பு பூச்சு, மரவேலை முடிந்த நிலையில் உள்ள வீடு மட்டுமே கிரஹப்பிரவேசம் செய்ய தகுதியான வீடுகள்.
- வாசற்படி வைக்காமலும், தரை பூசாமலும் உள்ள வீடுகளுக்கு கண்டிப்பாக கிரஹப்பிரவேசம் செய்யக்கூடாது
- கிரஹப்பிரவேசம் முன்னர் கண்டிப்பாக ஏதேனும் ஒரு மரம் அல்லது செடியை நடவேண்டும்
- கிரஹப்பிரவேசம் முன்னர் அந்த வீட்டில் ஒரு நாள் முழுவதும்(வெள்ளிக்கிழமை மிகவும் நன்று) பசு, கன்று தங்க வைத்து 5 காலம் உணவளித்தல் அவசியம் என்கிறது சாஸ்திரங்கள்.
- கிரஹப்பிரவேசம் முன்னர் அந்த இடத்தில் கட்டிட பணியாளர்களுக்கு ஒரு நாள் முழுவதும் 3 காலங்கள் சைவ உணவு அன்னதானம் செய்ய வேண்டும்.

**தலைவாசல்:**

- 9க்கு 5 என்கிற விகிதாசாரத்தில் தலைவாசல் இருத்தல் நன்று
- தலைவாசலில் 8 இதழ் தாமரை, இலட்சுமி படம் நன்று
- யானை, மயில், அன்னம் இருத்தல் நன்று
- வாசல் மேல்பகுதியில் சைவர்களுக்கு சிவலிங்கமும், வைஷ்ணவர்களுக்கு சங்கு, சக்கரம், நாமம் இருத்தல் அவசியம்

© www.prohithar.com

**பாலு. சரவணசர்மா**
புரோகிதர்–ஜோதிடர்
எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர்
தாம்பரம் மேற்கு, சென்னை 600 045

ௐ

தொலைபேசி/நகலி : **2226 1742**
கைத்தொலைபேசி : **98403 69677**
மின்அஞ்சல் முகவரி: **prohithar@gmail.com**
இணைய தளம்: **www.prohithar.com**

# பூமி (வாஸ்து) பூஜை

## புரோகிதர் வரும் முன்னர் செய்ய வேண்டியவை

- பூஜை செய்யும் இடம் ஈரம் இல்லாமல் இருக்க வேண்டும், 8 இதழ் தாமரை கோலம் போடவும்
- பட்டியலில் உள்ள அனைத்து பொருட்களும் தேவை
- பட்டியலையும் வாங்கிய பொருட்களையும் ஒப்பிட்டு சரி பார்க்கவும்
- குறித்த நல்ல நேரத்தில் பூஜையை துவக்கி நிறைவு செய்ய நன்கு திட்டமிடவும்
- திருஷ்டி சுற்றி உடைக்க கட்டிட தொழிலாளி குளித்து, வெள்ளை வேஷ்டி உடுத்தி, திருநீறு பூசியவர் தேவை.
- பாதசாரி, வாகன ஓட்டிகளின் பாதுகாப்பு முன்னிட்டு திருஷ்டி பூசணியை நடு **சாலையில் உடைக்க வேண்டாம்**
- பூஜையின் பொழுது பாரம்பரிய கலாசார ஆடை உடுத்தவும் (கருப்பு நிற பேன்ட் தவிர்க்கவும்)
- புத்துணர்ச்சிக்காக குடிநீர், காரம், இனிப்பு, குளிர்பாணம், காபி அல்லது டீ ஏற்பாடு
- பழங்களை பிளாஷ்டிக் பையில் வைக்கவேண்டாம். திறந்த நிலையில் அல்லது குளிர் பதனியில் வைக்கவும்
- நிலத்தில் வரைப்படத்தின் அடிப்படையில் ஈசான்ய (வடகிழக்கு) மூலையில் 3 அடி சதுரம் 1 அடி ஆழம் குழி எடுக்கவும்
- 5 சுமங்கலிகள் தேவை ( மரியாதை தாம்பூலம் சிவப்பு ரவிக்கை துணி அல்லது 11 ரூபாய்)
- கடப்பாரை, மம்மட்டி, பாண்டு ஆகியவற்றுடன் மேஸ்திரி 1 மணி நேரம் முன்னதாக வருகை தரவேண்டும்
- காமாட்சி விளக்கு காற்று அடித்தால் அணையாமல் ஒளிர்விட குண்டு பாத்திரம் (2 லிட்டர் அளவு) தேவை
- சாதாரண காலத்தில் 70 லிட்டர் தண்ணீரும், வெயில் காலத்தில் 100 லிட்டர் (பாதி டிரம்) தேவை
- வெயில் காலத்தில் சாமியானா தேவை, மழைகாலத்தில் தார்ப்பாய் தேவை
- விருந்தாளிகள் உட்கார நாற்காலி, ஜமக்காளம், பாய்.
- காந்தமானி (Magnetic compose) கொண்டு நிலத்தின் திசையை சரியாக அறியவும்

## பூஜைப்பொருட்கள்

| | |
|---|---|
| தரமான மஞ்சள் தூள் | 100 கிராம் |
| தரமான குங்குமம் | 50 கிராம் |
| மஞ்சள்கொம்பு | 25 கிராம் |
| குண்டு மஞ்சள் | 25 கிராம் |
| விபூதி சிறிய | சிறிய பொட்டல்ம் |
| பன்னீர் புட்டி | 50 கிராம் |
| சந்தணம் | 10 கிராம் |
| நவ ரத்தினம் பொட்டலம் | |
| நவதான்யம் கலப்பு | 50 கிராம் |
| கட்டி கற்பூரம் | 50 கிராம் |
| ஊதுபத்தி | 1 கிராம் |
| ஓமத்திரவியம் | |
| உமி பாக்கெட் | 1 |
| அரசன் சுள்ளி | 1 கட்டு |
| நெய் | 100 கிராம் |
| நல்லெண்ணெய் | 100 கிராம் |
| திரிநூல் | 1 கட்டு |
| நூல்கண்டு | 1 |
| பூநூல் | 2 |
| வெற்றிலை | 50 |
| பாக்கு | 25 கிராம் |
| சுன்னாம்பு | சிறியது |
| தீப்பெட்டி | 2 |
| தர்பை புல் | |
| பாக்கு தொன்னை | 1 டஜன் |
| ப்ளேடு | 1 |

| | | |
|---|---|---|
| வெல்லம் | | 200கிராம் |
| அவல், பொரி, கடலை | | 50 கிராம் |
| நாட்டு சர்க்கரை | | 50 கிராம் |
| தீர்த்த செட் | | 10 கிராம் |
| பச்சரிசி மாவு | | 100 கிராம் |
| வாழை இலை | | 5 |
| வாழை பழம் | | 12 |
| திருஷ்டி பூசனி சிறியது | | 1 |
| எலுமிச்சை பழம் | | 12 |
| பழங்கள் 5 வகை | தலா | 1 |
| மட்டை தேங்காய் | | 1 |
| உரித்த தேங்காய் | | 3 |
| பச்சரிசி | | 1 கிலோ |
| கோதுமை தவிடு | | 2 கிலோ |
| பூச்சரம் | | 15 முழம் |
| உதிரிப்பூக்கள் | | |
| அருகன் புல், துளசி, வில்வம் | | |
| மா இலை கொத்து | | |
| காசி துண்டு | | 1 |
| சிவப்பு ரவிக்கை துணி | | 1 |
| ஐந்து ருபாய் காசு | | 9 |
| ஒரு ருபாய் காசு | | 48 |
| 50 காசு | | 9 |
| தானம்: வெள்ளி காசு 5 கிராம் | | 1 |

## வீட்டிலிருந்து

பெரிய பித்தளை சொம்பு 1
காமாட்சி விளக்கு
தட்டு, மணி, தீபக்கலசம்
பஞ்சபாத்திரம் உத்திரனி
பழைய அகல் 2
தாம்பாள தட்டு 3
பேசின் 2
சிறிய கப் 5
மர மணை 3 , மணை மேல் துணி
எண்ணெய் புட்டி
பழைய செய்தி தாள் 10
கைதுடைக்க பழைய துணி
கோணி1
கத்திரிக்கோல், சமையல் கத்தி
தேங்காய் உடைக்க கத்தி

**குடம் 5 + தண்ணீர்**
**செங்கல் 11 – மணல்**

பக்கெட் 1
ஜமக்காளம், பாய், குடை
குடி நீர் / டம்பளார்

இனிப்பு, காரம்,
சிற்றுண்டி, தேநீர் ஏற்பாடு
புகைப்பட ஏற்பாடு
சுமங்கலிகளுக்கு மரியாதை தாம்பூலம்

தட்சணை ரூ. 1000

© www.prohithar.com

# குறிப்புகள் – விளக்கங்கள்

## வாஸ்து நேரம் கணிதம்

சூரிய உதயத்தில் இருந்து கணக்கிடப்படும்.
அனைத்து இடங்களுக்கும் சூரிய உதயம் **(Sunrise)**வேறுபடும்
வாஸ்து பூஜை இடத்தின் சூரிய உதயம் அறியவும்
சூரிய உதய நேரத்துடன் கீழே தரப்பட்டுள்ள வாஸ்து **துவங்கும்** நேரத்தை கூட்டவும்

| தேதி | நாழிகை | மணி நிமிடம் |
|---|---|---|
| சித்திரை 10: | 5 | 02-00 |
| வைகாசி 21 | 8 | 03-12 |
| ஆடி 11 | 2 | 00-48 |
| ஆவிணி 6 | 21 | 08-24 |
| ஐப்பசி 11 | 2 | 00-48 |
| கார்திகை 8 | 10 | 04-00 |
| தை 12 | 8 | 03-12 |
| மாசி22 | 8 | 03-12 |

உதாரணம்:

சித்திரை 10 அன்று சூரிய உதயம் 5 மணி 52 நிமிடம்

வாஸ்து துவங்கும் நேரம்
சூரிய உதயம்+ 2:00 மணி நேரம் =7:52

வாஸ்து முடியும் நேரம் = வாஸ்து துவங்கும் நேரம்+90 நிமிடங்கள்
காலை 7:52+90 நிமிடங்கள் =9:22
குறிப்பு கூடுதலாக ஒரு நிமிடத்தை சேர்த்தல் நன்று

மொத்த வாஸ்து நேரம் 90 நிமிடங்கள்.

18 நிமிடங்கள் வீதம் ஒரு கடமை என்று கொண்டு 1.பல் துலக்கல், 2.குளியல், 3.பூஜை, 4.உணவு, 5.தாம்பூலம் என ஐந்து கடமைகளை வாஸ்து புருஷன் செய்வார்.

இதில் கடைசி 36 நிமிடங்கள் (உணவு, தாம்பூலம்) மிக முக்கியமான சுப நேரமாக கருதப்படுகிறது. இந்த நேரத்தில் கிரகாரம்பம்( மனை பூஜை) செய்தல் மிக நன்று.

## வாஸ்து பூஜையும் விதிமுறைகளும்

வாஸ்து தேதி அந்த ஊரின் சூரிய அஸ்தமன விதி அடிப்படையில் சூரிய (சௌரமான **Solar month**) மாதப்பிறப்பு கணித்து, குறித்த நாள் அன்று வாஸ்து பூஜை செய்ய வேண்டும். சென்னை மாதப்பிறப்பை அப்படியே மற்ற இடங்களுக்கு பயன்படுத்தக்கூடாது.

வாஸ்து நாள் அன்று குடும்பத்தினருக்கு ஆகாத நட்சத்திரம், ஜென்ம நட்சத்திரம் இருக்க கூடாது

**பூஜை இடத்தை முன்னதாக காந்தமானி** (Magnetic compass)**கொண்டு திசையை மிகச்சரியாக அறியவும்**

வாஸ்து பூஜையை வாஸ்து நாளில் செய்ய இயலாத நிலையில் அடுத்து வரும் நல்ல நாளில், தாராபலன் , சந்திரபலன் உள்ள நாளில் வாஸ்து பூஜை செய்யவும்.

## இராகுகாலம், எமகண்டம்:

வாஸ்து பூஜை இராகுகாலம், எமகண்டம் நேரத்தில் வந்தால் முன்னதாக விளக்கு ஏற்றி பிள்ளையார் பூஜை செய்து பின்னர் சரியான வாஸ்து நேரத்தில் செய்யவும்.

இராகு காலம், எமகண்டம் ஆகியன சூரிய உதயத்தில் இருந்து சூரிய மறைவு வரை உள்ள பகல் பொழுதை 8 ஆக பிரித்து அதில் வரும் ஒருபாகத்தை கொண்டிருக்கும்

பஞ்சாங்கத்தில் பகல் பொழுதை அகஸ் என்று குறிப்பிட்டிருப்பார்கள்

சூரியன் இரவும், பகலும் சமமாக இருக்கும் காலத்தில் மட்டும் இராகு காலம், எமகண்டம் 1:30 மணி நேரம் இருக்கும்.

இராகு காலம், எமகண்டம் நேரம் வெயில் காலங்களில் நீண்டும், குளிர்காலங்களில் குறைந்தும் இருக்கும்.

எனவே தங்கள் ஊரின் சூரிய உதயம் அஸ்தமனம் அறிந்து பின்னர் எனது இணையதளத்தில் உள்ள

www.prohithar.com/downloads/ragukalam_emakandam_calculation.pdf

இராகுகால, எமகண்டம் கணிக்கும் முறையை பயன்படுத்தவும்.

© www.prohithar.com

**சூரிய உதயம், அஸ்தமனம்:**




சூரியனின் மேல் விளம்பை(Upper Limb), மையத்தை(Sun Centre), அடிவிளிம்பை(Lower Limb) **அடிப்படையாக** கொண்டு உதயமும், அஸ்தமனமும் கணக்கிடப்படுகிறது.

வானிலை அறிக்கை, செய்தித்தாள், ஆகியவற்றில் இடம் பெறும் சூரிய உதயம், அஸ்தமனம் வேறுபாடுகள் அதிக பட்சமாக 3 நிமிடம் கூடுதல் அல்லது குறைவாக இருக்கும்.

சூரியனின் உண்மையான உதயம், அஸ்தமனம் ஆகியவை வளிமண்டல ஒளிவிலகல் கோட்பாடு (Atmospheric refraction), பார்வை கோணம் (View angle). உயரம் (Altitude) ஆகியவற்றால் மாறுபடும்.

### ஆகாத நட்சத்திரம் - சந்திராஷ்டமம்

ஆகாத நட்சத்திரம் என்று குறிப்பிட்டுள்ள நட்சத்திரத்தை சார்ந்தவர்களுக்கு அன்று சந்திராஷ்டம தினம் ஆகும். அவர்கள் அன்று வாஸ்துபூஜை செய்யக்கூடாது, பூஜையில் கலந்துக்கொள்ளவும் கூடாது

சந்திராஷ்டமதினத்தில் பூஜை துவங்குவதை விட அவர்களின் நட்சத்திரத்திற்கு பொருத்தமான நல்ல நாளில் வாஸ்து பூஜை செய்யவேண்டும்.

### தமிழ் தேதிகள்:

தமிழ்தேதிகள் வாக்கிய முறையில் சூரிய சங்கரமனத்தை அடிப்படையாக கொண்டது

இங்கு தரப்பட்டுள்ள ஆங்கில தேதிகள் தமிழ் தேதி அடிப்படையிலான வாஸ்து நாளை குறிக்கும்

தமிழ் மாத பிறப்பு சூத்திரம் சூரிய அஸ்தமனத்தை அடிப்படையாக கொண்டது

புவியின் சில இடங்களில் தமிழ் மாத தேதி துவக்கம் ஒரு நாள் முன்னர் அல்லது பின்னர் நிகழலாம் எனவே இந்த தேதிகள் தங்களுக்கு பொருந்துமா என்பதை ஆய்வு செய்த பின்னர் வாஸ்து நாளை கணிக்கவும்

## சரியான வாஸ்து நூல்கள்

வாஸ்து என்பது பாரம்பரிய இந்து கட்டிடக்கலை ஆகும். இதை பரம்பரையாக, குருவழி, ஆய்வுவழி கற்றல் மூலமாக மட்டுமே கற்று மேண்மை அடைய முடியும். சுமார் 10ஆண்டுகள் பாரம்பரிய கட்டிக்கலை அனுபவம் உள்ளவர்களே இதில் திறம்பட அறியமுடியும்

தற்கால கட்டிடக்கலை எளிய உறுதித்தண்மை தொடர்பானது ஆனால் பலநூற்றாண்டு நிலைத்து நிற்க இந்திய அடிப்படையிலான கட்டிட முறையே சிறந்தது. இது கட்டிடக்கலை மட்டும் அல்ல உடல், ஆன்மாவின் இயக்கத்தை அறிந்த ரிஷிகளும், முனிவர்களும், சித்தர்களும் கண்டுபிடித்து கட்டிட முறையாகும்

வாஸ்து தொடர்பான புத்தகத்தை வேதபாட சாலை ஆசிரியர்கள், மரபு வழி கட்டிட கலைஞர்களான விஸ்வகர்மா குலத்தை சார்ந்த சிற்ப வல்லுநர்கள். ஆயாதி கணிதர், வடமொழியில் உள்ள மூல ஆதார சிற்ப சிந்தாமணி நூலை இடைச்சொருகல் இன்றி மொழிமாற்றம் செய்தவர்கள் எழுதும் புத்தகமே மிகச்சரியான கணித முறையிலான வாஸ்து வழிகாட்டியாகும்.

வாஸ்துநூல் கட்டிடபொறியியல் படிப்புக்குறிய நூலைவிட மிகவிரிவானதாகும்! பல ஆயிரம் கணக்குகளை கொண்டது. ஈடு இணையற்ற கலை அடிப்படையிலானது!

சிற்ப சாஸ்திரம் அறிந்து, பல கோவில்களை கட்டிய ஸ்தபதிகளே இந்த புத்தகத்தை எழுத மிகதகுதியானவர்கள்.

வாஸ்து பற்றி விரிவாக அறிய மூலதார நூல்கள் கோவில் கட்டிடக்கலை, இல்லம், அரண்மனை, கிராம நிர்ணயம், என்று பலதலைப்புகளில் வடமொழி, கிரந்தம், தமிழ் மொழிகளில் உள்ளது

மேற்படி புத்தகங்கள் மகாபலிபுரம் சிற்ப கல்லூரியிலும், தஞ்சை சரஸ்வதி மஹாலில் பழைய நூல்கள் மறுபதிப்பு செய்யப்பட்டு விற்பனைக்கு உள்ளது.

**Government College of Architecturee and Sculptur - GOVT SCULPTURE TRAINING**
Mamallapuram, Kancheepuram, Tamil Nadu, India, Pin Code: 603 104. Telephone :+91-2744 2261

பரம்பரை ஆயாதி கணிதர்(கிராம பரம்பரை பஞ்சாங்ககாரர்கள், வள்ளுவர்கள்) பயன்படுத்தும் நூல்கள் **சர்வார்த்த சிற்ப சிந்தாமணி**( மனையடி சாஸ்திரம்), மற்றும் **மரபுக்கட்டிக்கலை** போன்ற நூல்களாகும். நூல்களை நன்கு படித்து அதன்மூலம் மனையடி(ஆயாதி) கணிதம் அறிய தற்பொழுது சிறந்த நூல்கள் கிடைக்கிறது இவைகள் மூலமாக ஆயாதி கணிதத்தை ஆழமாக அறிந்து பயன்பெற்ற மற்றவர்களுக்கும் வழிகாட்டியாக திகழ்ந்து இந்திய பண்பாட்டு கட்டிடக்கலையினை போற்றி பாதுகாக்கலாம்.

இது குறித்து அறிய ஆர்வமுள்ளவர்கள் பழைய கோவில்களுக்கு சென்று மாதக்கணிக்கில் தங்கி அங்கு கட்டப்பட்ட கற்கோவிலை நன்கு கவனித்து குறிப்பெடுத்து நன்கு கணித அறிவை வளர்த்துக்கொள்ளுதல் மிக முக்கியமான ஒன்றாகும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

எனவே வாஸ்து என்கிற ஆயாதி கணிதத்தை ஆர்வத்தினால், முயற்ச்சியானால், நுன்கணித அறிவால் மட்டுமே கற்க முடியும் கூடுதலாக குருபரம்பரை கற்றல் மிகவும் பலன் அளிக்கவல்லது. இந்து கோவில்களில் உள்ள சிறிய கட்டிடப்பகுதி பற்றி அறியவே மிக நீண்ட பயணம் தேவை. இவைப்பற்றி அறியாமல் ஒருவர் வாஸ்து நிபுனர், அறிஞர் என்று கூறினால் அவர் மக்களை ஏமாற்றுகிறார் என்பதுதான் உண்மை.

மரபுக்கட்டிக்கலை சர்வார்த்த சிற்ப சிந்தாமணி

© www.prohithar.com

(7 நூல்கள்)




**ஆசிரியர். கலைச்செம்மல். கோ. திருஞானம்**
ஓவியர், சிற்பி
மாமல்லபரம் அரசு சிற்பக்கல்லூரி
044-27442589
விலை ரு.1650

( மனையடி சாஸ்திரம்)




**வீராசாமி முதலியார்வாள்**
இரத்தின நாயக்கர் அண்ட் சன் ஸ்
கொண்டித்தோப்பு, சென் னை 79
044-2520 6622
விலை ரூ. 200

தமிழகம் மற்றும் வெளிநாடுகளில் எண்ணற்ற கோவில்களையும், வள்ளுவர்கோட்டம், திருவள்ளுவர் சிலை ஆகியவற்றை வடிவமைத்து கட்டிய **ஸ்ரீ கணபதி ஸ்தபதி** அவர்களின் தமிழ் - ஆங்கில புத்தகங்கள்




Building Architecture of Sthapatya Veda




Vaastu Purusha Mandalam



Quintessence Of Sthapatya Veda




Temples of Space Science



The Scientific Edific of Brihadeeswara Temple
Tanjore, Tamilnadu




Shiva Vishnu Temple Complex: Concept and Design




Who Created God?



Brahma Sutra Vaastu Bhashiam




The Colossal Statue Of Ayyan Thiruvalluvar

ஆகமநூல்கள், சில்ப சாஸ்திரங்கள் மட்டமே உண்மையான மூல ஆயாதி (வாஸ்து) கணித நூல்கள் இவைகள், தேவநாகரி வடமொழி, தமிழ், கிரந்த மொழிகளில் பல ஆயிரம் கணக்கான செய்யுள்களை தன் னகத்தே கொண்டது. பாரம்பரிய கட்டிடக்கலை பற்றிய இந்நூல்கள் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு என் னை தொடர்பு கொள்ளவும்.

www.prohithar.com

**அழகான வடிவமைப்பில் வாஸ்து புத்தகம்:**

தற்பொழுது கடைகளில் பல்வேறு பெயர்களில் வாஸ்து பற்றி விற்க்கப்படும் நூல்களில் மிக கவர்ச்சிகரமாக அட்டைப்படம் வடிவமைக்கப்பட்டு அதிகமாக இடைச்சொருகல், சொந்த கருத்துக்கள், மூலகருத்து நீக்கல் போன்றவையே உட்புகுத்தப்பட்டுள்ளன மேலும் இந்திய கட்டிடக்கலைக்கு தொடர்பில்லாத விஷயங்களை எல்லாம் வாஸ்துவின் பெயரால் எழுத்து வணிகம் செய்கிறார்கள் என் பது வருத்தமான உண்மை.

வேதகணித அறிவே இல்லாதவர்கள்கூட வெறும் வார்த்தை ஜாலங்களால் பக்கங்களை நிரப்பி பயமுறுத்தும் வகையில் "வாஸ்து" தலைப்பில் தவறான புத்தகங்களை வணிக நோக்கில் வெளியிடுகிறார்கள். இத்தகைய புத்தகங்களில், சிறிய கணித சூத்திரங்களை பூதக்கண்ணாடி வைத்துப்பார்த்தால்கூட கண்டுபிடிக்க முடியாதஅளவு வார்த்தை தோரணங்கள் அலங்காரமாக இருக்கும்! இவைகளை 10 நிமிடத்தில் படித்து முடித்து விடலாம். இதனால் எந்த பயனும் ஏற்படாது, மாறாக பிழைப்புக்காக எழுதும் பிழையான வாஸ்து நூல்களால் குழப்பம் அடைந்து நல்ல வீட்டை இடித்து பாழக்கி, கட்டுமான பொருள் விற்பனையாளரும், கட்டுமான குத்தகைதாரரும், கடன் தரும் வங்கியும் தான் பலன் அடைவார்கள், உரிமையாளர் கடன் பட்டு பொருளாதர பின்னடைவை, மன உளைச்சலை சந்திப்பதுதான் மிச்சம்!

அண்மைகாலங்களாக சுவர் வண்ணப்பூச்சிலும் வாஸ்துவை புகுத்தி பெயின்ட் வியாபாரத்தை பெருக்கிவிட்டார்கள் விளைவு கண்ணுக்கு எரிச்சலூட்டும் வண்ணங்களில் வீடுகள் காட்சியளிக்கிறது.

காமிகாகமம் - வாஸ்து சாந்தி படலம்

வாஸ்துசாந்தி யியற்றுங்காலம்.

ஜீர்ணோத்தாரம் செய்வதிலும் புதிதாகச் செய்வதிலும் சேதாரமாவதிலும் அவ்வாறே பின்னமாவதிலும், காற்று ஜலம் நெருப்பு இவற்றின் உபத்திரவத்திலும், அரசன் திருடர் முதலானவரின் உபத்திரவத்திலும், தெற்கு மேற்கு விருத்தியிலும், கிழக்கு வடக்குச் சேதத்திலும், அளவின் தாழ்வு உயர்விலும், துவாரத்தின் வெளிவருவதைப் பேதிப்பதிலும், பிராகாரம் தாழ்ப்பாள் இவற்றைப் பேதிப்பதிலும், தேவாலயங்களைச் செய்வதிலும், இதரமான யஜமானன் விஷயத்திலும், குறைந்த லக்ஷணமுள்ள வாஸ்துவையுடைய விடத்திலும், ஒன்றுமில்லாத விடத்திலும், அவ்வாறே நஷ்டமான விடத்திலும், அவ்வாறே பிரதிலோமாநுலோம சம்பந்தத்திலும், அபிசாரக நிமித்தமான குற்றத்திலும், வியாதி அகால மரணம் இவற்றிறு லுண்டான பயத்திலும், உற்பாத காலத்திலும் அவசகுன காலத்திலும் ஸமஸ்த தோஷங்களையும் போக்குவதற்காக வித்துவானவன் உடனே வாஸ்து சாந்தியைச் செய்ய வேண்டும்.

வாஸ்து பதவிந்யாசம்.

பதின்மூன்று பதங்களாவது இருபத்தைந்து பதங்களாவது முப்பத்தாறு பதங்களாவது நாற்பத்தொன்பது பதங்களாவது அறுபத்துநான்கு பதங்களாவது சூத்திர வர்க்கத்திற் கூறப்பட்ட பதமாவது இவைகளுக்கு வேறாக யோக்கியமுள்ள வொன்றையாவது, வாஸ்து சாத்திரத்தை நன்றாக உணர்ந்தவர் விந்யசிக்க வேண்டும்.

வாஸ்து ஹோமம்.

நெற்களால் மேடை செய்து, எள்ளோடு கூடின அமுதுகளாலும், பொரி தர்ப்பைகளோடு கூடினதும் புஷ்பங்களோடு கூடினதுமாயுள்ள சருவை அவ்விடத்தில் ஸ்தாபித்து நெய்யால் அபிகாரஞ்செய்து, இருதய மந்திரத்தாற் புரோக்ஷித்து வஸ்திரத்தாலும் நல்ல தர்ப்பங்களாலும் ஆச்சாதனம் செய்து, வேதிகைக்கு மேற்குத் திக்கில் குண்டத்தை மூன்று மேகலையுடன் நாற்சதுரமான ஹஸ்தப் பிரமாணமுள்ளதாயும் ஒன்பது அங்குலம் வட்டமாயும் செய்து, அவ்விடத்தில் அக்கினியைக் கொணர்ந்து அக்நிகாரியத்திற் கூறப்பட்ட மார்க்கத்தாற் சமித்து நெய் அவிசுகளாலும் யவை கருமைநிற எள்ளுகளாலும், தேன் நெய் பால்களோடு கூடினதாலும், அறுகினாலும் ஹோமத்தைச் செய்ய வேண்டும்.

பஞ்சப் பிரம மந்திரம் சிவாங்க மந்திரங்களாலும் சிவமந்திர பூர்வமான வித்தியாங்கங்களாலும் அகோர மந்திரத்தாலும், நூறுவது அதிற்பாதியாவதும், முன்கூறினதான திரவியங்களால் ஐந்து முறையும், அறுகு ஹோமம் யமனை ஜெபித்ததாக நூற்றெட்டும் ஆகும். பிறகு பூர்ணாகுதியைச் செய்து வாஸ்து தேவர்களைப் பூஜிக்க வேண்டும்.

**© காப்புரிமை2010. இதில் இடம் பெற்ற தகவல்கள் எனது சொந்த ஆக்கம். இதை புத்தகமாக வெளியிட உள்ளதால் இந்த தகவல்களை வணிக நோக்கில், மற்ற இணைய தளங்களில்(Website), இணைய கூடல் (Blog)களில் பயன் படுத்த அனுமதி தரப்படவில்லை.**

உ



**தணிகை ஜோதிட நிலையம்**

பாலு சரவண சர்மா

*பழைய தாம்பரம் கிராம புரோகிதர்- ஜோதிடர் -கணிதக்ஞர்*

எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர், தாம்பரம்(மே), சென் னை 45, பாரத நாடு.

தொலைபேசி: 91 44 2226 1742, 91 98403 69677

மின் னஞ்சல்: prohithar@gmail.com இணையம்: www.prohithar.com

© காப்புரிமை 2010 11.3.2010

சுபம்

கடைசி திருத்தம்: 28.2.2012



© www.prohithar.com